பத்திரிகை செய்தி

# தாட்கோ மூலம் கடனுதவி கோரி விண்ணப்பித்தவர்களிடம்

## சென்னை மாவட்ட ஆட்சியர் நேர்காணல்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் மானியத்துடன் கூடிய வங்கி கடன் பெற விண்ணப்பித்த ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கான நேர்காணல் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் முனைவர்.ஜெ. விஜயாராணி இ.ஆ.ப தலைமையில் 09/12/2021 புதன் கிழமை அன்று நடைபெற்றது.

இந்த திட்டத்தின் கீழ் தொழில்முனைவோருக்கான கடன், வாகன கடன், சிறு தொழில் செய்யக் கடன் ஆகியவற்றிற்கான மான்யத்துடன்கூடிய வங்கி கடன் பெற 110 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 93 பேர் நேர்காணலில் பங்கேற்றனர்.

விண்ணப்பித்திருந்த நபர்களின் விண்ணப்பங்கள் தொழில் குறித்து சென்னை மாவட்ட ஆட்சியர் கேட்டறிந்தார். பயனாளிகளை தேர்வு செய்து மானியத்துடன் கூடிய வங்கி கடன் பெற தாட்கோ மூலம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும் என ஆட்சியர் தெரிவித்தார். நேர்காணலில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. ஆர்.வருண் தீபக், தாட்கோ மாவட்ட மேலாளர் திருமதி. எல். தனலட்சுமி, மாவட்ட தொழில் மைய இணை இயக்குநர் திரு. பிரபு மோசஸ் ஜெயகுமார், மகளிர் திட்ட அலுவலக கண்காணிப்பாளர் திரு. மனோகர் மற்றும் பல்வேறு வங்கி முதன்மை மேலாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

(அ/ம) 9/12/21 2/2

மாவட்ட ஆட்சியர்,
சென்னை

09/12/2021

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்டம்

09/12/21